Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC. NO. 17/2021 Date: 27.09.2022
Deposition of witness for prosecution: PW(LW1)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | சிவக்குமார் | Caste | |
| Father/ Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | Year: |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 27.09.2022 TIME 6.03 pm

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது சீலையம்பட்டியில் குடியிருந்து துணி தேய்க்கும் வேலை செய்து வருகிறேன். கடந்த 28.11.2020ம் தேதி மாலை 7.45 மணியளவில் எனது அண்ணன் குருசாமி கோவில்பட்டிக்கு இருசக்கர வாகனத்தில் பால் எடுத்து கொண்டு சென்று கொண்டிருந்தார். நான் எனது அண்ணனுக்கு பின்னால் தனியாக எனது இருசக்கர வாகனததில் சென்று கொண்டிருந்தேன். பூமார்கெட்டை தாண்டி, பிருத்திகா கோவில் அருகே சென்று கொண்டிருந்த போது சுமார் 50 மீட்டர் இடைவெளியில் டமால் என்று சத்தம்கேட்டது. எனது அண்ணன் சென்று கொண்டிருந்த இருசக்கர வாகனமும், வாகனத்தில் உள்ள பால் கேனும் கீழே விழுந்துவிட்டது எனதுஅண்ணன் கீழே விழுந்துவிட்டார்.

2) எதிர் திசையிலிருந்து வந்த பல்சர் வாகனத்தை ஆஜர் எதிரி ஓட்டி வந்து எனது அண்ணன் வாகனத்தின் மேல் மோதியதில் எனது அண்ணன் கீழே விழுந்துவிட்டார். நான் எனது அண்ணனை எடுத்து பார்த்தபோது முகம், சிதைந்திருந்தது. நெற்றி முழுவதும் இரத்தம் இருந்தது. மூக்கு வழியாக இரத்தம் வந்தது. நானும், சூர்யாவும் சேர்ந்து எனது அண்ணணை ஓரமாக கூட்டி வந்தோம். அதன் பின்னர் ஆம்புலன்ஸ் மூலமாக சின்னமனூர் அரசு மருத்துவமனைக்கு எனது அண்ணனை சிகிச்சைக்கு கூட்டி சென்றோம். பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தேனி க.விலக்கு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பின்னர் மதுரைக்கு அழைத்து செல்ல இருப்பதாகவும், மருத்துவரிடம் கூறயபோது மருத்துவர் வேண்டாம் என்றும், மிகவும் மோசமான நிலைமையில் என் அண்ணன் இருப்பதாகவும் கூறினார்கள். சிறிது நேரத்தில் என் அண்ணன் இறந்துவிட்டார். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஒட்டி வந்த நபர் சம்பவ இடத்திலிருந்து ஒரு ஆட்டோவில் ஏறி சென்றுவிட்டார். நான் சின்னமனூர் மருத்துவமனையில் இருந்த போது, போலிசார் என்னை விசாரித்து புகார் பெற்று கொண்டனர். என்னிடம் காட்டபடும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் மனு அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்க்ள.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) புகாரினை போலிசார் என்னிடம் கேட்டு எழுதி கையெழுத்து வாங்கினார்கள். சம்பவம் எனதுஅண்ணன் பால் ஊற்ற செல்லும்போது நடந்தது. சம்பவம் மெயின் ரோட்டில் கோவிலை கடந்து தான் கோவில்பட்டிக்கு செல்ல வேண்டு அதற்கு முன்பாகவே விபத்து ஏற்பட்டது. விபத்தின் போது எனது அண்ணனை மோதிய பல்சர் பைக்கில் இரண்டு நபர்கள் வந்தாாகள். எதிரியுடைய உறவினர்கள் தான் எதிரியையும், அவருடன் வந்தவரையும், தூக்கிவிட்டார்க்ள. சாதரணமாக ஒரு நபரை அழைக்கும்போது பெயரை சொல்லிதான் அழைப்பார்கள் என்றால் சரியல்ல. எதிரி தகப்பனார் பெயர் நான் அ.சா.ஆ 1 புகாரில் கூறவில்லை என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்தாக சொல்லப்படும் இடம் ஒரு வளைவான இடம் என்றால் சரிதான்.

2) பொதுவாக வளைவில் நடக்கும் விபத்தை வளைவிற்கும் சிறிது தூரம் தள்ளியிருப்பவர்கள் பார்க்க இயலாது என்றால் சரியல்ல. 2 நபரை நான் பார்த்தேன். எந்த நபர் வாகனத்தை ஓட்டி வந்தார் என்று நான் பார்க்கவில்லை. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. க.விலக்கு மருத்துவமனைக்கு நான், என் மனைவி, சென்றோம். அதன் பின்னர் பின்னர் இந்த வழக்கு தொடர்பாக என்னை விசாரிக்கவிலலை என்றால் சரிதான். எனது அண்ணன்தான் வேகமாக வாகனத்தை செலுத்தியதால் விபத்து எற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து எனது அண்ணன் ஓட்டுநர் உரிமம் இல்லாமலும், இன்சூரன்ஸ் இல்லாமலும் வாகனத்தை ஓட்டி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ நேரம் இருட்டாண நேரம் என்பதால் சரியாக தெரியவில்லை. சம்பவ இடத்தில் பைக் ஓட்டி வந்த 2 நபருகளுக்கு காயம் இருந்ததா என்றால் ஒருவருக்கு மூக்கில் காயம் இருந்தது. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவிலலை என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC. NO. 17/2021 Date: 27.09.2022
Deposition of witness for prosecution: PW2(LW3)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | சூர்யா | Caste | |
| Father/ Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | Year: |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 27.09.2022 TIME 6.03 pm

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது சீலையம்பட்டியில் குடியிருந்து பால் வியாபாராம் செய்து வருகிறேன். அ.சா1 எனது தாத்தா முறை ஆவார். கடந்த 28.11.2020ம் தேதி நான் பால் ஊத்திவிட்டு, கோவில்பட்டியிலிருந்து வந்தபோது, ஆஜர்எதிரி பல்சர் பைக்கில் சென்றார். பின்னால் நான் வந்து பார்த்தபோது என் தாத்தா கீழே விபத்து ஏற்பட்டு கிடந்தார். ஆஜர் எதிரி அந்த இடத்தில் இல்லை பைக் மட்டும் தான் கிடந்தது. பின்னர் ஆம்புலன்ஸ் வந்து அரசு மருத்துவமனைக்கு ஏற்றி சென்றேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரியை தெரியும் எனது பக்கத்துாரை சேர்ந்தவர் என்றால் சரிதான். கடந்த 28.11.2020ம் தேதி இரவு 7.45 மணிக்கு சீலையம்பமட்டி - சின்னமனுார் மெயின்ரோடு பரித்தியங்கா கோவில் அருகே நானும் என் நண்பர் முருகனும் நின்று இருந்ததோம் என்னை அப்போது குருசாமி TN 60 B 4279 TVS பைக்கில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தார் என்றும், சின்னமனுாரில் இருந்து வடக்கு நோக்கி வந்த TN 60 AE 9369 பல்சர் பைக்கினை ஆஜர் எதிரி முத்துக்கருப்பன், சிவசங்கரை பின்னால் உட்கார வைத்துகொண்டு அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், ஆஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து குருசாமி ஓட்டி சென்ற பைக்கின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபத்தை பார்த்த நானும் முருகனும் குருசாமிக்கு பின்னால் பைக்கில் வந்த அவரது தம்பி சிவக்குமாரும் ஓடிப்போய் பார்த்தபோது குருசாமி மூக்கு, வாய் இரத்தக்காயமும், வலது கண் வீங்கியும், வலது முழங்காலில் இரத்தக்காயத்துடன் இருந்தார் என்றும், காயம்பட்ட குருசாமியை துாக்கி 108 ஆம்புலன்ஸில்மூலம் சின்னமனுார் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றும் சொன்னால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. நான் பார்த்தபோது, குருசாமி கீழே

விழுந்து கிடந்தார். விபத்தை நேரில் பார்த்துவிட்டு, போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரி எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக அவர் கேட்டு கொண்டதன் பெயரில் உண்மை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தை நா்ன நேரில் பார்க்கவில்லை. விபத்து நடந்து முடிந்த பின்பு தான் நான் சம்பவ இடம் சென்றேன்.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC. NO. 17/2021 Date: 27.09.2022
Deposition of witness for prosecution: PW3(LW4)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | சுந்தரம்மாள் | Caste | |
| Father/ Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | Year: |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 27.09.2022 TIME 6.31 pm

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது சீலையம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். அசா1 எனது கொழுந்தன், அசா2 பேரன் முறை ஆவார். கடந்த 28ம் தேதி, 11வது மாதம் சுமார் 2 வருடத்திற்கு முன்பு எனது கணவர் இருசக்கர வாகனத்தில் கோவில்பட்டிக்கு பால் ஊத்த சென்றுவருகிறேன் என்று சொல்லிவிட்டு சென்றார். நான் என் வீட்டிலிருந்த போது, என் கணவருக்கு துர்க்கையம்மன் கோவில் அருகே விபத்து ஏற்பட்டதாக கேள்விபப்பட்டு, நான் சென்று பார்க்கும் முன்பு சின்னமனூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்க்ள. நான் சென்று பார்த்தேன். எனது கணவரின் முகம் சிதைந்திருந்தது. உடல் முழுவதும் இரத்தம் வழிந்திருந்தது, அதன் பின்னர் மேல் சிகிச்சைக்காக தேனி க. விலக்கு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். இதன் பின்னர் என் கணவர் இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :** இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.